
312

# கிருஷிகன்

(கிராம முன்னேற்ற இதழ்)

312/3-53



வருட சந்தா 3 ரூபாய்

**பயிர்த்தொழில் பண்ணை**

மாத வெளியீடு

தனி பிரதி 4 அணா

# நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்

---

இந்த இதழின் வேறு பக்கங்களில் திரு. முருகனாரின் கட்டுரையையும் 24 ஆண்டுகளுக்குமுன் (1928) எழுதியுள்ள F. X. மூப்பனாரின் கடிதத்தையும் பிரசுரித்திருப்பதின் மூலம், தமிழ்நாட்டு விவசாயிகளுக் கென ஏன் ஒரு பத்திரிகை வேண்டும்; அவ்விதம் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பத்திரிகைகள் எத்தனை; அவைகள் ஏன் நின்றுவிட்டது, நாம் அவைகளை எவ்வாறு ஆதரித்து வந்தோம்; ஏன்-எப்படி ஆதரிக்கவேண்டு மென்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இக்கிருஷிகன் பத்திரிகையும் 24 ஆண்டுகளுக்குமுன் 12 ஆண்டுகள் நடத்தப்பட்டு போதியபடி நாம் ஆதரிக்காததால் மிகுந்த கஷ்டத்துடன் நிறுத்தப்பட்டு விட்டது.

நமது நாடு பெரும்பாலும் விவசாயமே தொழிலாகவுள்ள விவசாயிகளையே குடிமக்களாகக் கொண்ட விவசாய நாடு. அப்படியிருந்தும் விவசாயிகளுக்கென ஒரு பத்திரிகை கூட இல்லை. இந்நிலைமையை இன்றைய மேனாட்டு விவசாயத்துடன் ஒப்பிட்டு பார்ப்போமானால், அந்நாட்டு விவசாயம்-விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞான விவசாய அறிவு தான் இவ்வளர்ச்சிதான் காரணமென்பதும், இவ்வித வளர்ச்சிக்கு ஏற்ற சாதாரணங்களில் முக்கியமானது பத்திரிகைகள் தானென்பது அங்கு பிரசுரமாகும் ஆயிரக்கணக்கான விவசாய பத்திரிகைகளின் எண்ணிக்கையிலிருந்து நன்கு விளங்கும்.

இவ்விதம் பத்திரிகையில்லா குறையை போக்கவும், விஞ்ஞான விவசாய அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ற முறையில், கிருஷிகனின் புதிய தொடரை (New Series) ஆரம்பித்து 4-வது வெளியீடுகள் வெளிப்பட்டுள்ளது. ஆனால் குறிப்பிட்ட அளவு சந்தாதார்கள் இன்னும் சேரவில்லை என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இப்பத்திரிகையை துடங்குமுன் நமது நண்பர் ஒருவர் பின்கண்டவாறு எச்சரிக்கை செய்தார்.

"தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு பயன்படும்படி பத்திரிகை நடத்த வேண்டுமென்கிற தங்கள் நோக்கம் சிறந்ததுதான் ஆனால் போட்டிபந்தயங்கள், சினிமா பகுதிகள், மற்றும் பல சாக்கடை பத்திரிகைகள் இவைகளுக்குத்தான் தற்காலம் தமிழ் நாட்டில் ஆதரவு இருக்கிறதென்பதையும் ஞாபகப்படுத்துகிறேன். பல நுட்பமான விவசாய உண்மைகளை ஆராய்ந்து கட்டுரைகள் தயாரித்து அவற்றை தங்கள் செலவில் அச்சடித்து இலவசமாய் அனுப்பினாலும் கூட அதை வாசித்து பயன்பெருவார். தமிழ்நாட்டில் -ல் ஒருவர்கூட காண்பது அபூர்வம். ஆகவே எதையும் ஆழ்ந்து வாசித்து செய்வது நலம்"

நாமும் ஒரு விவசாயியே ஆனதால் மேற்படி எச்சரிக்கையை பொருட்படுத் தாமல், சகோதர விவசாயிகளுக்காகவும், விவசாய முன்னேற்றத்திற்காகவும் சேவைசெய்யும் லக்ஷியத்துடன், எவ்வித லாபமும் கருதாது இக்கிருஷிகன் பத்திரிகையை வெளியிட்டு வருகிறோம்.

# அறிவிப்பு

கிருஷிகன் பேனாவும், கிருஷிகன் காலண்டர் (1953 ஆடி முதல் 1954 ஆனி வரை) தயாராகிவிட்டதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஷை காலண்டரையும், பேனாவையும் வன மகோத்சவ மலருடன் ஜூன்மீ 30வ இங்கிருந்து ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பிவைக்கிறோம்.

தபால் பார்சல் கட்டணம் 0-8-0 ஆகவும், பதிவுக்கட்டணம் 0-6-0 ஆகவும் உயர்த்தப்பட்டிருப்பதால் இனி தபால் செலவுக்கு அனுப்பும் நேயர்கள் 0—14—0 அனுப்பவேண்டும்.

இதுவரை சந்தா பாக்கியையும், தபால் செலவையும் அனுப்பாத நேயர்கள் 15—6—53-க்குள் தங்கள் சந்தா பாக்கியை அனுப்பி புதுப்பித்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நமது காரியாலயத்தில் கிடைக்கும் விதைகள், கருவிகள் இவைகளின் பட்டியல் மேமீ இதழுடன் அனுப்பப்படுகிறது. அதில் 5 ரூபாய்க்கு குறையாத ஆர்டர் அனுப்பும் நேயர்களுக்கு (விதைகளுக்கு) பேனாவும் காலண்டரும் உடன் அனுப்பிவைக்கப்படும்.

இதர விபரங்களுக்கு:

**மானேஜர், பயிர்த்தொழில் பண்ணை**

**ஹனுமந்தபுரம்**

**அன்னியூர் P.O., விழுப்புரம் S. Ry.**

# கிருஷிகன்

(கிராம முன்னேற்ற பத்திரிகை)



| பயிர் 1 | விஜயஷூ சித்திரைமீ | கதிர் 4 |
|---|---|---|


## பொருளடக்கம்


1. தலையங்கம் 3
2 ஆசிரியர் குறிப்புகள் 4
3. என்றும் உழவே இனிது 5
4. விஞ்ஞான ஆராய்ச்சி 8
5. பட்டிக்காடு 12
6. நாம் விவசாய பத்திரிகைகளை எவ்வாறு ஆதரிக்கிறோம் 14
7. சாத்தியமா?
8. பாரத நாட்டு பயிர்த்தொழில் செய்திகள்
9 நன்றி
10. வேண்டுகோள்


AUG 1953

கிருஷிகனில் வெளியாகும் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் இவைகளில் வரும் பெயர்களெல்லாம் கற்பனையேயன்றி அவை எவரையும் குறிப்பிடுபவைகள் அல்ல. (ப-ர்)



# உதிர்ந்த மணிகள்

## புதுவருஷ வாழ்த்து

"இந்த மங்கள தினத்தில் நான் உனக்கு எதை கொடுக்கட்டும். உன்னிடமும் என்னிடமும் இன்னும் பலரிடமும் இல்லாதது எதுவோ அதையே கொடுக்க முயற்சிக்கிறேன். அந்தப் பொருள் கிடைத்துவிடும்பொழுது எல்லாம் கிடைத்துவிட்டதாக கொள்ளலாம். "சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்" என்ற பழமொழிப்படி என்னால் என்னதான் கொடுக்கமுடியும். ஆனால் நாம் அனைவரும் சேர்ந்து ஆண்டவனிடம் கொடுக்கும்படி வேண்டுவோம்."

"புதிய வருஷம் உனக்கு நன்மை தருவதாக. உன் உடல் வலிவும் மனோபலமும் ஆத்மீக சக்தியும் நாளுக்கு நாள் வளர்ச்சிபெற்று அன்புடன் அவைகள் அனைத்தையும் பாரதமாதாவின் சரணங்களில் அர்ப்பணம் செய்யவேண்டுமென்பதே என் ஆசையும் ஆசியும்."

புத்தாண்டு ஸம்வத். 1974.

பாபுவின் ஆசிகள்.

—மகாத்மாஜி.

---

மகாத்மாஜி தம் புதல்வர் மகன்லாலுக்கு எழுதிய கடிதத்தின் பகுதிகள். "கதர் மலர்" மார்ச்சு இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

# THE KIRUSHIKAN

A Tamil Monthly Journal Devoted to Agriculture and Rural Welfare

# கிருஷிகன்

## (கிராம முன்னேற்றப் பத்திரிகை)

"இரவார் இரப்பார்க்கொன்றீவர் கரவாது
கை செய்தூண் மாலையவர்"

—குறள்.

பயிர் 1 | விஜய௵ சித்திரைமீ | கதிர் 4

## நமது புது வருஷ வாழ்த்துக்கள்

இன்று பிறந்துள்ள இப்புத்தாண்டின் விஜய என்னும் பெயருக்கேற்ப தமிழ் நாடெங்கும் மழை பெய்துள்ள நல்லதொரு சுபச்சேதியுடன் 60 ஆண்டுகளுக்குப்பின் நம்மை தேடி வந்திருக்கும் விஜய (ஆண்டி)னை வாழ்த்தி, வரவேற்பு கூறுவோமாக.

நாட்டிலே பஞ்சம், பட்டினி, பற்றுக்குறை ஆகியவைகள் இன்னமும் தீர்ந்தபாடில்லை. குமுறிக்கொண்டிருக்கும் யுத்த மேகங்களும் விலகவில்லை. உலகமெங்கும் பீதியும் குழப்பமும் நிறைந்துள்ள நிலைமையில் நல்லதொரு சுபிட்ச வாழ்வை எதிர் நோக்கி சென்றுகொண்டிருக்கும் நம்மிடையே இன்று விஜய வருடம் பிறந்திருக்கிறது. நாம் பல வருடங்களாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பல விஜயங்(வெற்றி)கள் நமக்கு கிடைக்குமென்று நம்புவோமாக. அறியாமையை அகற்றி, பசி, பஞ்சம், பட்டினி இவைகளை ஒழித்து, ஒற்றுமையை வளர்த்து, எல்லோரும் இன்ப வாழ்வெய்தச்செய்யும் சக்தியை அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை ஒருமனதுடன் பிரார்த்திப்போமாக.

புதிய ஆண்டின் பிறப்புடன் நமது உழைப்பும் நல்லுணர்ச்சியும் புதிய சக்தியுடன் உயர்நிலை பெறட்டும்.

கடந்த வருட கஷ்டங்களை வெகுதொலைவில் பின்னே கழித்துவிட்டு, இருள் நீங்கிய, ஒளி நிறைந்த வருங்காலத்தை எதிர்நோக்கி முன்னேறுவோம்

அடுத்த வன மகோத்சவத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. ஆனால் சென்ற ஆண்டில் நடப்பட்ட மரங்களில் உயிருடன் இருப்பவை எத்தனையென்பதை யாருமறியார். இந்த நிலைமையிலே பலன் தரும் சாலை மரங்கள் பல ஈவு இரக்கமின்றி வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் உற்பத்தியைவிட உயிருடன் இருப்பதை அழிக்காமல் காப்பது அவசியம்-அவசரம் என்று ஜனவரி இதழில் குறிப்பிட்டிருந்தோம். அவ்விதமே சாலை மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதை

**சட்டமும் கடமையும்**

தடுக்க ஒரு சட்டம் செய்ய நமது சென்னை ராஜ்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனர் என்பதை யறிய மகிழ்ச்சியடைகிறோம். சாலைகளிலுள்ள மரங்கள் மட்டுமின்றி பட்டாவிலுள்ள சில குறிப்பிட்ட மரங்களையும் நாட்டின் நலனை யனுசரித்து வெட்டுவதை தடை செய்வது மிகவும் அவசியமாகும். ஆனால் வெறும் சட்டங்களால் மட்டும் எந்த குறிப்பிட்ட பலனையும் அடைய முடியாதென்பதும், சட்டத்தை நடத்தும் முறையும் பொதுமக்களின் ஒத்துழைப்பும்தான் இதை வெற்றிகரமாக்கும் என்பது கடந்த கால அனுபவங்கள் காட்டும் உண்மை.

ஆகவே சட்டத்தோடுகூட மரங்களை பாதுகாக்கும் பொறுப்பை சாலைகளின் அருகிலுள்ள விவசாயிகளிடம் விட்டு வைப்பது நல்லது அதாவது மரங்களின் மகசூலை அனுபவித்துக்கொண்டு அவைகளை பாதுகாக்கும் உரிமையை அவர்களிடமே விடுத்து, அதற்கான வரியை அவர்களிடம் வசூலித்துக் கொள்ளலாம் என்பது நமது அபிப்பிராயம்.

## உணவு உற்பத்தி பெருக

சென்ற மார்ச்சு 15உயிலிருந்து ஜப்பானிய முறை நெல் உற்பத்தி இயக்கம் நாடு எங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ள செய்தி எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்துள்ளது. அதற்கனுசரணையாக தமிழ் நாடெங்கும் பரவலாக மழை பெய்துகொண்டிருக்கிற செய்தியும் எல்லோரையும் மகிழ்விக்கும். இவ்வனுகூலமான சமயத்தை (சர்க்காரும் இயற்கையும் செய்யும் உதவியை) பயன் படுத்திக்கொண்டு விவசாயிகள் நல்ல முறையில் அதிக உற்பத்திசெய்து நாட்டின் முன்னுள்ள இவ்வடிப்படை உணவுப் பிரச்னையை தீர்ப்பார்கள் என்று நம்புகிறோம்.

# என்றும் உழவே இனிது

(வித்துவான்-தி. மு. சங்கரலிங்கம், தமிழாசிரியர்
கௌமார மடாலயம், திருவாமாத்தூர், விழுப்புரம் P. O.)

என்று கூறியதைக் கேட்ட விவசாய அனுபவம் இல்லாத ஒரு சிலர் அறிவு வேலை செய்யத் தொடங்குகிறது. என்? இவர் சொல்வதுபோல் உழவினால் உண்டாவது இன்பமா? அல்லது துன்பமா? என்றறியாதலால், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற மொழியேற்ற முன்னோர் உணவிற்கு உழவுசெய்து அளவிலாத பொருள் பெற்று "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்ற முறையில் தன் நாட்டிற்குப் போக பிற நாட்டிற்கும் வேண்டிய பொருளை அனுப்பி வாணிகம் செய்து வாழ்க்கையை வளமுற நடத்தினர். பைந்தமிழ் நாட்டைப் பாரினிற் சிறக்கவைத்தனர். ஆனால் நாம் இன்று அன்னியர் வாழ்விலே ஆசைகொண்டு அவர் மொழி கற்றலே அறிவு எனக்கொண்டு நம் மொழியை இகழ்ந்து அவர் மொழியிலே மோகம் வைத்து வாழத் துவக்கிவிட்டோம் பெற்ற தாயை இகழ்ந்து வேறொருத்தியைப் புகழ்வதுபோல.

உழுது பயிர்செய்து வாழும் வாழ்க்கையையே இழிதொழிலாக எண்ணி வீணே காலம் போக்கி சோம்பேறிகளாக—வாழ வேறு வழியில்லாதவர்களாக—வாழ்கிறோம். கையிலிருக்கும் பொருள் சிறிது கொண்டாவது உணவினைப் பெருக்காமல் நவ நாகரீகத்திற் சிக்கி ஆடை முதலியவற்றில் அளவுக்கு அதிகமாகச் செலவிட்டு வாழ்கிறோம்.

> உழவுத் தொழிலே உயர்ந்ததெனச் சொன்னார்
> கழகமுற்ற மெய்ப்புலவர் கள். (தண்டபாணி சுவாமிகள்)

என்பதை உணராமல் வாழும் சிலருக்கு உழவே இனிது என்பது எப்படித் தெரியும்?

நாட்டை மன்னன் செங்கோலுடன் துங்கமுற நன்கு ஆட்சி புரிகிறான்; மக்கள் வளமுடன் வாழ்கின்றனர் என்றால் அதற்குக் காரணம் உழவர்கள் அளித்த உணவேயாகும் என்பதை,

> மன்னவர்தங் கைக்கோல் வளர்ப்ப(து) உழவரது
> கொன்னவில்செங் கைத்தாற்றுக் கோல்

என்றும், எத்தகைய மேலான தொழிலைச் செய்தவரும் உழுவார் தலைக்கடையில் வந்து நிற்கவேண்டும் என்பதை,

> எத்தொழிலாற் பொன்பெறுவார் யாரேனும் ஏருழவர்
> கைத்தொழிலூண் அன்றியுய்யார் கள்

என்றும் முருகதாசர் மனுநெறித் திருநூலில் அருளுகின்றனர். பயிர் செய்ய விரும்பும் ஒருவன் அனுபவம் இன்றிப் பயிர் செய்தால் பல நன்மை

யும் தராது; அஃதேயன்றி சோம்பல் மிகுதியாலும் கவனியாதுவிடின் பலனளிக்காது என்பதை

> வேலியிட நீர்நிறைப்ப வெய்ய களைகளைய
> கூலியிள சோம்பின்நொய்தாம் கூழ்

என்றும் மனுநெறித் திருநூல் வழுத்துகிறது

பொருள் பெற்றோர் அதனல் உழவு செய்யாதுவிடின் எவ்வளவு தீமை பயக்குமோ அதுபோல உழவர் உழுது பொருள் தேடி எல்லோருக்கும் அளிக்காது பதுக்கிவைத்தால் நிறைந்த தீமை பயக்கும். அவ்வாறு செய்யாது மக்கள் நலம்பெற மகிழ்ச்சியுடன் உழைத்து உழுது பொருள் அளிக்கும் உழவர்கள் வாழ்க என்பதை

> உதவச் சலியா உழுதொழிலோர் எல்லாம்
> மதகயம்போல் வாழ்க! மகிழ்ந்து.

என்று மனுநெறித் திருநூல் இயற்றிய மகான் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் வழுத்துகின்ர்.

தமிழ்மறை வகுத்த பெரியார் உலகில் உள்ள பல தொழில்களில் "உழவே தலை" என்று கூறுகிறார். என்? பணம் படைத்தானும், நல்ல குணம் படைத்தானும் பாரினில் பண்புடன் வாழ்க்கையை நடத்துதற்கு உணவன்றோ அவசியம். உணவின்றி வாழ்வதுதான் முடியுமா? பொறுமையைக் கையாள்வது எத்தனை நாளைக்கு? பசி வந்தாலே,

> "மானம் குலம்கல்வி வன்மை அறியுடைமை
> தானம் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல்"

என்ற பத்தும் பறந்துபோம் என்றன்றோ பைந்தமிழ்ப் பழம் பாடல் பகிர்கின்றது. தேரைப் பழுதின்றி ஓடுதற்கு அச்சாணி எவ்வளவு இன்றியமையாமல் இருக்கிறதோ அதுபோல உலகமென்னும் தேரைப் பழுதின்றி ஓட்டுதற்கு உழவர்களே உறகத்துக்கு அச்சாணி போன்றவர்கள் ஆவர் என்று தமிழ் மறை தந்த தண்டமிழ் வள்ளுவர் கூறுகிறார். நன்கு முயற்சியுடன் உழுது வாழ்பவனைப் பல குடைகளை வைத்துள்ள பணக்காரனும் நாடுவான் என்பது உண்மையேயன்றோ?

பலநிலம் படைத்தவனும் பண்படுத்தி உழவினை முயற்சியுடன் செய்யாவிடின் நிலம் என்ற பெண் அஃதுடையவனைக் கண்டு நகை செய்யும் என்பதை "நிலமென்னும் இல்லாள் நகும்" என்று திருவள்ளுவர் கூறுகிறார். மேலும் பல நிலம் படைத்தானேயன்றி அதனைப் பண்படுத்தி உழவுசெய்யப் பணம் படைத்தானில்லை. மனம் படைத்துள்ளான் மக்கள் பசிநோயைத் தீர்த்திடவேண்டுமென்று. ஆனல் ....."கையிலோர் காசுமில்லை; கடன் தருவார் எவரும் இலர்" என்று இதயம் கீதம் பாடுகிறது. உழுது பயிரிட—வளங்கொள் உரமிட உற்ற வழியில்லை. வாடினன் வளங்கொள் பயிரிட. இந்நிலையைத்தான் வள்ளுவர் பார்த்தார்போலும்.

மகனே! வாடாதே! வளமாயிரு! உழுது பயிரிட உரமில்லை என்று வாடாதே! நின்னிடம் உள்ள நிலத்தை உழு. நன்றாக உழு. வெய்யோன் அருள் நிறைந்திருக்கட்டும் வீணான நிலத்தில். ஒரு பலமான அளவுள்ள மண் அரைப்பலம் என்ற முறையில் காயவைப்பாய்! ஒரு பிடி எருவையும் உண்மையிலேயே போடவேண்டாம். பின் பயிரிடு, உரமிட்டுப் பயிர் வளரும் வளப்பத்தைவிட பன்மடங்கு வளமுடன் இருக்கும். ஊக்கமுடன் உரைத்தபடி செய்" என்கிறார். இதோ பாருங்கள் இக்கருத்தமைந்த குறளை,

"தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்" என்று

இன்னொரு புலவர் உழவின் இனிமையை—உழவுக்கு வேண்டுவதை நிரல்பட வைத்துக் கூறுவதைப் பாருங்கள். எருது ஒன்றிருந்தாற் போதாது. இரண்டு வேண்டும் என்கிறார். பின்னர் ஒருவரிடம் விதை வாங்குவோம் என்று காலங்கடத்தி, அவரும் தருவதாக ஒப்புக்கொண்டு உரிய காலத்தில் இல்லை என்று கூறினும் கூறலாம். அப்பொழுது பயிரிடுவது கெட்டுப்போகும் அல்லவா? ஆதலால் இல்லத்திலேயே வித்திருக்க வேண்டும் என்கிறார். இவைகளும் இருக்கும். ஆனால் நிலம் ஒருபுறம், நிலத்திற்கு வேண்டிய நீர் நிலை மற்றொருபுறம் என்ற முறையில் இருக்காது நீர் அருகிலேயே நிலம் இருக்கவேண்டும் என்கிறார். மேலும் ஊர் மூலை, நிலம் ஒரு மூலை எனக்கொண்டு நிலம் பார்க்கச் செல்லவேண்டுமானால் எளிதான முறையில் அமைந்திருக்கவேண்டும் என்கிறார். பார்த்தார் இவை எல்லாமே ஒன்றுபட இருக்கிறது. நாம் எப்பொழுது நிலத்தில் இருக்க முடியாதல்லவா? ஆதலால் வேலையாட்கள் நாம் சொன்னால் மறுக்காதமுறையில் சொன்னபடி நடக்கவேண்டும். இவையெல்லாவற்றைவிட இறுதியிற் சொன்னபடி நம் சொற்படி வேலையாட்கள் நடக்கவேண்டும். இன்றேல் பயனடையமாட்டான். இவைகளை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தார். புலவருக்கு உழவு இனிமை என்று புலப்பட்டது. உள்ளம் மகிழ்வடைகிறது. பாடலாக வெளிவருகிறது பலரும் கேட்டுப் பயனடைய, தீட்டினார் வாட்டமின்றி எட்டிலே. ஏன்? நீங்களுந்தான் படித்துப் பாருங்கள் நேயமிகு தமிழ்ப் பாடலை.

எரும் இரண்டுளதாய் இல்லத்தேவித்துளதாய்
நீரருகே உள்ள நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரஎளிதாய் செய்வாரும் சொற்கேட்கில்
**என்றும் உழவே இனிது.**

இப்புலவர் கூறுவது உண்மை என்றுதானே எண்ணுகிறோம். இப்படி எல்லாம் ஒருவனுக்கு இருந்துவிட்டால் "என்றும் உழவே இனிது" என்பதுபொய்க்குமா?............முற்றிலும்—உண்மை என்பதை உணர்ந்து உழைப்போமாக.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் — பாரதியார்

வணக்கம்

# விஞ்ஞான ஆராய்ச்சியும் விவசாய முன்னேற்றமும்

## இந்திய விவசாயமும்—சீர்திருத்த முயற்சிகளும்

(மொழிபெயர்ப்பு)

---

[முன் 1-வது இதழ் தொடர்ச்சி]

அங்கு விவசாயிகளுக்குள் ஒருவருக்கொருவர் நெருங்கிய தொடர்பும் சம்பந்தமும் ஏற்பட கூட்டுறவு சங்கங்கள், கிராம பாங்கிகள், நன்கு அமைக்கப்பட்ட விவசாய இலாகாவும் இருக்கிறது. இங்கோ எவ்வித தொடர்பும் சம்பந்தமும் இல்லை. இதன் பயனாக அங்கு ஏற்படும் புதிய முறைகளையும் ஆராய்ச்சிகளையும் சிறத்தையுடன் ஏராளமானவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். இங்கேயோவென்றால் புதிய முறைகளையும் ஆராய்ச்சிகளையும் ஜனங்களுடைய கவனத்திற்கு பலவந்தமாக திணிக்கவேண்டியிருக்கிறது. அதனாலே புதிய முறைகளை பரப்புவதில் கஷ்டப்படவேண்டி யிருப்பதுடன், பொருளாதார நெருக்கடியினால் இதர மேல் நாடுகளைப்போல் பரவலாக கையாள முடியவில்லை

இருந்தபோதிலும் இந்திய விவசாயிகள் கேவலமான நிலமையிலோ சீர்திருத்தங்களுக்கு எதிரிடையாக இருப்பதாக இதனால் அர்த்தம் கொள்ளக்கூடாது. இவர்களுக்கு நம்பிக்கையுள்ள வழியிலிருந்து தகவல்கள் கிடைத்தல், அந்த முறைகளை எப்படி கையாள்வதென்பதைப்பற்றி அவர்களுக்கு திருப்தி ஏற்படும்படி செய்தல்; அப்படி கையாள்வதினால் ஏற்படும் லாபங்களை விளக்குதல் ஆகியவைகளில் ஏற்படும் கஷ்டம்தான் பிரதானமாகும். இவைகள் செய்யப்பட்டால் இந்திய விவசாயிகளுக்கு ஏற்படும் விருத்தியான அனுபவத்தினால் அதிக மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்காதென்பதை உணரலாம். உண்மையிலேயே புதிய முறைகளில் பயனிருக்கிறதென்பதை உணர்ந்தால் இந்திய விவசாயிகள் அனுஷ்டிப்பார்கள். ஆனால் அவர்களுடைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, புதிய முறைகளில் அவர்களுக்குள்ள அசிரத்தை; இப்புதிய முறைகளின் உயர்ந்த தன்மை; அதனால் கிடைக்கக்கூடிய நிச்சயமான பலன் இவைகளைப்பற்றி விவசாயிகளுக்கு திருப்தி ஏற்படும்படி எடுத்துக் கூறவேண்டும்.

இம்மாதிரியான புதிய முறைகளினால் மேல்நாட்டில் அடைந்துவரும் பலன்கள் சில இந்திய நாட்டிற்கு மாறுபட்டதாக இருக்கலாம். விவசாயிகளின் பொருளாதார நிலமை முதலியவைகளை தெரிந்துகொண்டாலன்றி, புதிய முறைகளின் தன்மை, அவைகளை அனுஷ்டிப்பதைப்பற்றியும் மதிப்பிடுவது முடியாமலிருக்கலாம்.

ஏற்கனவே நாம் கூறியபடி இந்திய விவசாயிகள் அநேகரிடம் ரொக்க முதல் கிடையாது. இந்திய விவசாயிகள் பிரதி வருடமும் தன் விவசாய காரியங்களுக்காக ரொக்கமாகவோ இதர வகையிலோ கடன் வாங்கியே செய்யவேண்டியிருக்கிறது. இவ்விதம் வாங்கும் கடனுக்கு 25% முதல் 75% சத விகிதம் வட்டி கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்விதம் புதிய முறைகளை கையாளுவதால் 100-க்கு 10% முதல் 20% சதம் அதிக வருமானம் கிடைக்கிறதென்று புள்ளி விபரத்துடன் ருசுப்படுத்துவதுமட்டில் போதுமானதாகாது. இம்முறைகளுக்கு தேவைப்படும் அதிக முதலீடு, அதற்காக கொடுக்கப்படவேண்டிய வட்டி இவைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்திய விவசாயிகளிடத்தில் சொந்த முதலில்லாததால் புதிய முறைகளை பரிசோதிப்பதனுல் ஏற்படக்கூடிய (நஷ்ட) அபாயத்திற்கு உள்ளாக விரும்பமாட்டார்கள். இப்புதிய முறைகள் நிச்சயமாக லாபகரமானதென்று காணப்பட்டாலொழிய விவசாயிகள் புதிய முறைகளை தைரியமாக கையாளமாட்டார்கள். நிச்சயமானதென்ருல்: ஒரு விவசாயி தன் தொழிலில் முதலீடு செய்யும் தொகைக்கு 25% சத விகிதம் உபரி வருமானம் கிடைக்க வேண்டுமென்பதுதான் இந்திய விவசாயத்தில் புதிய முறைகளை புகுத்த விரும்புபவர்கள் இந்த உண்மையை மனதில் கொண்டுதான் திட்டங்களை தயாரிக்கவேண்டும். அதாவது பழக்கத்தில் கொண்டுவர விரும்பும் முறைகளுக்குத் தேவையான முதல் சுலபமாக கிடைக்கும்வரையிலும், அந்த முதலீடு அதிகமாக இருக்கும்வரையிலும், இதன் நடைமுறையில் அதிக முன்னேற்றம் காணமுடியாது. இன்னும் தெளிவாக சொல்வோமானுல் இந்தவிதமான புதிய அபிவிருத்திகள் செய்வதற்குத் தேவையான (கடன்) பொருளாதார வசதிகள் குறைந்த வட்டிக்கு சுலபமாக கூட்டுறவு அல்லது இதர வழிகள் மூலம் கிடைக்கும்படி செய்யவேண்டியது அவசியமாகும்.

மேலே கூறப்பட்டவைகளெல்லாம் தவிரவும் இந்திய விவசாயத்தில் சீர்திருத்தமென்பது சுலபமான காரியம் அல்ல. கடந்த சில ஆண்டுகளில் இதைப்பற்றி போதுமான அனுபவம் பெற்றிருக்கிருேம். அநேக தோல்விகளும் ஏற்பட்டிருக்கிறது இவ்விதம் நமக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தைக் கொண்டு எதிர்காலத்தில் செய்யவேண்டிய நடவடிக்கை திட்டத்தை வகுக்க, விவசாய போர்டின் கூட்டத்தில் 1908-ம் வருஷம் ஒரு கமிட்டி நியமித்து, இதைப்பற்றி விவாதித்து, வருங்காலத்தில் செய்யவேண்டியதையும், பொருத்தமான அபிப்பிராயத்தை கூறும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டது. மீண்டும் 1909ஆ இரண்டாவது தடவையாக கமிட்டி நியமிக்கப்பட்டது. அவைகளின் நடவடிக்கைகள் கூடிய சீக்கிரம் வெளியிடப்படும் எப்படி இருந்தபோதிலும் இம்முறைகளைப்பற்றிய திட்டத்தின் சுருக்கம் இக்கட்டுறைக்கு மிக்க பயனுள்ளதாக இருக்குமென கருதப்படுகிறது.

இந்திய விவசாயத்தில் செய்ய விரும்பும் சீர்திருத்தமானது இந்தியாவின் இயற்கை நிலமைக்கேற்றதா என ஆராய்ந்து பார்க்கவேண்டும்! ஒரு புதிய முறையோ அல்லது கருவியோ குறிப்பிட்ட பிரதேசத்தின் நில

மைக்கு பொருத்தமானதா என்பதையும் முதலில் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் ஆராய்வதன்மூலம் உண்மை நிலமையை நன்கு உணர்ந்து கொள்ளக்கூடுமாகையால் இது மிக அவசியமாகும். இதில் ஏற்படும் அசிரத்தைதான் நம்மை தோல்வியடையச் செய்வதாகும் விவசாயிகளின் நம்பிக்கையில் குறைவு, முன்னேற்றத்தில் தடை ஆகியவைகளின் நஷ்டத்தை மதிப்பிடுவது கஷ்டமாகும். உதாரணமாக:—சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்க பருத்தியை இங்கு உற்பத்தி செய்துபார்க்க ஏராளமாக வினியோகிக்கப்பட்டது. அவைகள் எங்கு பயிரிடப்பட்டதோ அங்கு விவசாயத் துறையிலாவது, பொருளாதாரத் துறையிலாவது பொருத்தமானதா? லாபகரமானதா? என்பதைப்பற்றி பரிசீலனைசெய்து பார்க்கப்படவேயில்லை இதனுல் ஏற்பட்ட பலன் என்ன தெரியுமா? பல இடங்களிலும்ஷை பருத்தியானது பலனளிக்கவில்லையென்பதுதான்.

ஒருக்கால் இது அவ்வளவு பிரமாதமானதல்லவென்று தோன்றக்கூடும் ஆனல் உண்மையில் விவசாயிகளின் நம்பிக்கையை இழக்க நேரிட்டது. ஈடு செய்யமுடியாத பெரிய நஷ்டமாகும். இந்தவிதமான பருத்தியை ஆராய்ச்சியின்றி புகுத்தியதன்மூலம், புதிய விவசாய முறைகள் அனுபவ சாத்தியமற்றதென்று விவசாயிகள் கருதவும், மற்ற புதிய முறைகளை கையாளுவதில் சஞ்சலமும் சந்தேகமும் உண்டாக்கிவிட்டது.

புதுப்புதுப் பயிர்கள், கருவிகள், முறைகள் இவைகளெல்லாம் நன்ருகத்தான் இருக்கிறதென்ருலும், அவைகளை குறிப்பிட்ட பிரதேசங்களில் பரிசீலனை செய்து பார்க்காமலும், அந்த பிரதேசத்தின் நிலமையை நன்கு புரிந்துகொள்ளாமலும் உபயோகப்படுத்தும்படி கூறப்படுகிறது. இதன் பலன் தோல்வி, நம்பிக்கை குறைவு, புதிய முறைகளில் அவநம்பிக்கை இவைகள்தான். இதிலிருந்து எந்த புதிய முறையும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பரிசீலனைசெய்து பார்த்தாலன்றி பிரயோசனப்படாதென்று கூறுவதாக கருதக்கூடாது. ஆனல் உள்ளூர் நிலமையின் பரிசீலனையென்ருல் அருகாமையிலுள்ள பரிசோதனைப் பண்ணையில் இம்முறைகள் வெற்றிகரமாக காணப்பட்டதா யென்றுதான் அர்த்தமா? பரிசோதனைப் பண்ணையில் பார்க்கப்பட்டதென்றவரையில் சரிதான். ஆனல் இதை எல்லாவிதங்களிலும் சரியென்று கொள்ளமுடியாது ஏனெனில் ஒரு விவசாய பரிசோதனைப் பண்ணையின் நிர்வாகிக்கு ஏற்பட்ட அனுபவமானது. ஒரு விவசாயிக்கு ஏற்படும் அன்பவத்திற்கு மாறுபட்டதென்பது இந்த விஷயத்தை அனுபவ சாத்தியமாக பரிசீலனை செய்பவர்களுக்கு நன்கு தெரியும்.

உதாரணமாக:—இறக்குமதி செய்யப்பட்ட இரும்பு கலப்பையானது நன்ருக வேலை செய்கிறது, சிக்கனமானது, உபரியான மகசூலும் கிடைக்கச் செய்கிறது. ஆனல் இதையே ஒரு விவசாயியிடம் கூறுங்கள். அதனுடைய வேலைத் திறமையை ஒப்புக்கொண்டாலும், அவைகளை உபயோகப்படுத்தும் போது அதன் பாகங்கள் கெட்டுப்போனல் எப்படி? எங்கே? சரிசெய்துக் கொள்வது என்றுதான் முதலில் கேட்பான்.

ஒரு பண்ணையாள் இதை ஒன்றும் செய்யமுடியாது தேவையான தனிப் பாகங்களை விவசாயிகள் வாங்கிவைத்துக்கொள்ள முடியாது; கடைகளிலும் (கிராமங்களில்) கிடைப்பதுமில்லை; அதனால் கலப்பையின் உபயோகம் நல்லதாக இருந்தாலும் இந்த பிரச்னைகள் தீரும்வரையில் தாமதப்பட வேண்டியிருக்கிறது. மற்றொரு உதாரணம்:—கரும்புக்கு உரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். கரும்பின் வளர்ச்சிக்கும் வெல்லத்தின் மகசூலுக்கும். மிக நேர்த்தியாக இருக்கிறது; இதை சிபாரிசு செய்த உடனே வெல்லத்தின் தரம் மட்டமாகிறதேயென்று கேள்வி போடுகிறார்கள். வெல்லத்தின் தரத்தில் சிறிது குறைவுபடுகிறதென்றாலும் அது மிகவும் குறைந்த அளவுதான். இந்த மாதிரி தன்மையானது பரிசோதனைப் பண்ணையில் கவனிக்கப் படவில்லையென்பதும் இச்சிறு வித்தியாசத்தை (எனக்கு தெரிந்தவரையில்) ரசாயன பரிசோதனையினால் தெரிந்துகொள்ள முடியாதென்றும் கருதுகிறேன். ஆனால் நீங்களும் உங்கள் சிரமத்தைப்பற்றிச் சொல்லவேண்டும் அல்லது உங்கள் உரமானது சிலகாலம் பொறுத்திருக்கவேண்டியிருக்கும். இதுபோல இன்னும் பல உள. இன்னும் பல உதாரணங்களையும் எழுதிக் கொண்டு போகலாம்.

—(தொடரும்)

---


# கிருஷிகனுக்கு

## நீங்கள் சந்தாதாரராக சேர்ந்துவிட்டீர்களா?

இல்லையேல்

இன்றே சந்தாதாரராக பதிவு செய்துகொள்ளுங்கள்

**ஜப்பானிய நெல் சாகுபடி & வன மகோத்சவ மலர்கள் உள்பட**

வருட சந்தா ரூபாய் மூன்றுதான்

30—6—53-க்குள் பதிவு செய்துகொள்ளும்

சந்தாதாரர்களுக்கு மட்டும்

கிருஷிக் பௌண்டன் பேனு & 1953 கிருஷிகன் காலண்டர் பரிசாக அனுப்பப்படும்.

*தபால் ரிஜிஸ்டர் சிலவுகளுக்கு 0–12–0 சேர்த்தனுப்பவேண்டும்.*

ஜப்பானிய நெல் சாகுபடி மலர் அணா 8

*தபால் சிலவு 0—1—3*

பயிர்த்தொழில் பண்ணை

ஹனுமந்தபுரம் :: அன்னியூர் P. O, :: விழுப்புரம் S. I. R.

# பட்டிக்காடு

(அன்னியூர்-மா. முருகனர்)

என்னடா சுத்தப்பட்டிக்காடு?

இப்படிப் பேசுகிறுன் நகரத்தான் போக்கை யறியாது நடக்கின்ற கிராமத்தானைப் பார்த்து நகரத்தான்.

ஆம்! அவனுக்கு எப்படித் தெரியும்? பட்டணத்தான் போக்கு. கீழ் வானம் வெளுக்கத்தான் நாழிகை, அதற்கு முன்னமே புறப்பட்டுவிடுவான் உழைப்பதற்கு. அங்கு பகலவன் பவனியின் பார்வையெல்லாம் பாட்டாளியின்மேல்தான் இருக்கும். இப்படி நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கின்றுனே—அந்த முழு உழைப்பின் பலனை உண்டு கொழுக்கின்ற பட்டணம், தன்னைப் பாதுகாக்கின்ற பாட்டாளிகள் நிறைந்த பட்டிக்காட்டைப் பார்த்து, பரிசு வழங்குகிறது—ஏமாளி என்ற நையாண்டியை.

நகரத்துக்குத் தேவையான அரிசிமுதல் அடுப்புக்கரி வரையில்; உற்பத்திச் செய்தனுப்புகின்ற உழைப்பியந்திரம் பட்டிக்காட்டுப் பாட்டாளி; அதுமட்டுமென்ன? அவன், வகை வகையாக உடுக்கின்றுளே, உடை—அந்த உடையின் பஞ்சும், பஞ்சைப் பதமாக்கி நெய்கின்றத் திறனும் நிறைந்தவன் பட்டிக்காட்டான். ஆனல் அவன் உடுப்பதும் உண்பதும் தேவைக்கு மிக மிகக் குறைவானது.

இன்பக் களஞ்சியத்தை ஏற்படுத்துகின்றவனுக்கு இன்னலும் ஏமாளிப் பட்டமும் வரக் காரணமென்ன? அவன் தன் வாழ்க்கையைப்பற்றி கருதாமல் உழைப்பியந்திரமாகவே தன் வாழ்நாளெல்லாம் உழன்றுக்கொண்டிருந்தக் காரணந்தான்.

ஆம்! பட்டிக்காடு, ஓர் ஏணியாகவும், ஓர் ஆசிரியனுகவும், இருந்துக் கொண்டு; பல நகரத்தை உண்டாக்கியதே தவிர, தன் சுயநலத்தில் ஓரளவிற்குக்கூட முற்போக்கடைந்ததாகத் தெரியவில்லை. இப்படிக் கிராமம் தன்னலமற்று வாழ்ந்ததால்தான் இன்று தன் மதிப்பை இழந்து ஏமாளிப் பட்டம் பெற்றுவிட்டது.

பட்டிக்காடு—பட்டணத்தான் நாகரிகத்துறையை அடைவதற்கல்லவோ அன்று உலகம் போற்றும் உத்தமர் காந்தியார் அவர்களும், கிராம சேவைக்காக கனவுக்கண்டு, வார்தாவிலே தன் வாழ்க்கை நடத்தினுர். அதன் உண்மையை மக்கள் அன்றும் இன்றும் கண்டிலர்.

கிராமத்தில் சூழ்ந்துள்ள மூடப் பழக்கவழக்கங்கள் முற்றிலும் ஒழிய வேண்டும். அப்படி ஒழிந்த நாள்தான் கிராம முன்னேற்றப் பாதையின் முடிவையடைந்த நாளாகும். அந்த முன்னேற்றப் பாதையைக் காண்பதற்கு இங்கு அறியாமையை அகற்றும் அறிவாலயங்கள் அநேகம் தேவை. அப்பொழுதுதான் பட்டிக்காட்டில் நிறைந்திருக்கும் படிக்காத தற்குறிகள் பகுத்துணர்வுப்பெற்று பட்டணத்தின் நாகரீகப்பாதையை அடையமுடியும்.

இன்னும் அறிவாலயம் மட்டுமிருந்தென்னப் பயன்? அதனுடன் பட்டிக்காட்டான் பகுத்தறிவும், நாட்டின் வளப்பமும், தன் வாழ்க்கையில் வளத்தைக் காணவேண்டுமானால் பட்டணத்தானுக்குள்ள வசதிகள் அனைத்தும் பட்டிக்காட்டிற்குத்தேவை. இதனைப் பாராள்வோர் கவனிக்கவேண்டிய முக்கிய நிகழ்ச்சிகள் கூட ஏன் அவர்கள் பட்டிக்காட்டான் வரிபணத்தால் அல்லவா? அரசியல் வாழ்க்கையை நடத்தி ஆங்காங்கு பவனி வருகின்றார்கள்.

அவர்கள் கண்ணில் படவில்லையா? என்ன? பட்டிக்காட்டான் பரிதாபக்காட்சி. சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? அவர்களும்—செல்வத்திற்கே தாய்வீடு போன்றியங்கும் கிராமங்களின் நிலையை. பட்டிக்காட்டானுக்குத் தேவை—படிக்க வசதி நிறைந்த இலவச படிப்பு; உண்ண நல்ல உணவு; உடுக்க உடை; இருக்க இடம்; பகுத்துணரக் கலைக்கழகம்; நாட்டின் நிலையுணர நல்லதோர் நிகழ்ச்சித்தாள்கள் நாலாப்பக்கங்கட்குப்போக வர போக்குவரத்து வசதிகள். இவைகளில் ஏதேனும் இங்கு சரியாக உண்டா? இந்நிலையில் அவன் வாழ்வதினால்தான் நகரத்தில் நாலணுவிற்குக் கை வண்டி யிழுக்கும் கூலியாட்களுக்கும் கீழாக மதிக்கப்படுகிறான். கிராமத்தில் நான்கு ஏக்கர் வைத்துக்கொண்டு நாணயமாக வாழுகின்ற விவசாயிடம் உலக நகரத்தில் இருப்பவன் கிராமத்தில் பெண் கொள்வதோ கொடுப்பதோ என்றால் நரகலோகம் ஒன்று இருப்பதாகச் சொல்லுகின்றார்களே அங்கே போய் உறவு செய்துகொள்வதாகக் கருதுகிறான்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக காட்டைத் திருத்தி கடும் வெய்யலில் உழுது உழைக்கின்றானே தன்னலமற்ற உழவன், அவனின் தன்னலமற்றச் செய்கையைக் கண்டல்லவா வள்ளுவப் பெருந்தகையவர்களும், உழுவாருலகத்தார்க் காணி யென்றும், உலகமே உழவின உழப்பில்தான் வாழ்கின்றதென்பதை "சுழன்றுமேர்ப்பின்னதுலகம்" என்றும், அவர்களின்வஞ்சகமற்ற வாழ்க்கையின் வாய்மையை நினைந்து "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" ரென்றும் அவர்களின் புகழுக்கே துணையாக விளங்கும் ஈகையை எண்ணியன்றோ "இரவாரிரப்பார்க்கொன்றீவர்" என்னும் விளக்கம்தந்தார்.

இத்தகைய உழவர்களின் பெருமையைத் தாங்கிநிற்கும் பட்டிக்காட்டின் வாழ்வு வளங் காணவேண்டுமானால், பட்டிக்காட்டின் குறைகளைப் பாராள்வோர்க்கு எடுத்துக்கூறும் ஆற்றல் நிறைந்த பத்திரிகைகள் நமக்குத்தேவை. அந்தத் தாளில் காந்தியார் கனவு கண்டுக்கொண்டிருந்த கைத்தொழிற் கல்வி, அகிம்சை, ஒப்புறவு வளர்க்கும் கட்டுரைகள், கதைகள் நிறைந்திருக்க வேண்டும். இந்த நிலையில் பட்டிக்காட்டிற்குப் பரிந்து உழைக்குமானால் காந்தியார் கனவு கண்டுக்கொண்டிருந்த கிராம முன்னேற்றத்தை நம் வாழ்நாளில் கண்டு அதன் இன்பத்தை நுகர்ந்துவிடலாம் என்பது உறுதி. பத்திரிகை வளர்ச்சிக்கு பட்டிக்காட்டு மக்களும் தன் சுயநலத்தைத் தகர்த்து பாடுபடவேண்டுமென்பது நமது தலையாயக் கடன்.

பட்டிக்காட்டின் நலமே—பாராள்வோர் நலம்.

# எவ்வாறு நாம் விவசாயப்பத்திரிகையை ஆதரிக்கிறோம்

தென் இந்தியாவிலுள்ள விவசாய விருத்திக்காக "கிருஷிகன்" என்ற இம்மாதாந்திரப் பத்திரிகை 7—8 வருடங்களாக நடத்தப்பட்டு இடையில் சில காரணங்களால் நிறுத்தப்பட்டு மறுபடியும் நவவருட சஞ்சிகை சென்ற ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. விவசாய ஞானத்தில் நம் நாட்டார் ரொம்பவும் தாழ்ந்தவர்களென்றும் விவசாயப் பத்திரிகையில் அவ்வளவு நாட்ட முள்ளவர்களில்லை என்பதையும் அறிந்து ரொம்பவும் குறைந்த சந்தா ஏற்பட்டிருக்கிறது. நம் தாய்ப்பாஷையில் சென்னை ராஜதானியில் விவசாய விஷயமாக இப்பத்திரிகை ஒன்றே இருப்பதால் குறைந்தது 3 ரூபாய் சந்தா ஏற்படுத்தி ஏன் இன்னும் பத்திரிகை பெரிதாக்கக்கூடாதென்று ஓர் பிரேரேபனை எனக்குண்டாகிறது. இதற்குமுன் விவசாய தீபிகை "தென் இந்திய விவசாயம்" "கிருஷிகமித்திரன்" போன்ற பல பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆதரிப்பாரின்றி அடியோடு தொலைந்துவிட்டது. சொற்ப சந்தாவாகிய ஒண்ணேகால் ரூபாயை ஒழுங்காகக் கொடுத்து ஆதரியாமல் அநேக மிராசுதார்கள் அயர்ந்து தூங்கும்போது அதிகப்படுத்துவது எங்ஙனமென்று கனம் பத்திராதிபர் அவர்கள் பதிலளித்து விடுவார்களென்பது திண்ணம்! பார்க்கப்போனால் நம்நாட்டு பண்ணையார்கள் ஊக்கமும் அவ்வாறுதானிருக்கிறது. ஆகையால் லாபத்தைக் கொஞ்சமேனும் கருதாமல் பரோபகாரத்தையும் தேசாபி விருத்தியையும் உத்தேசித்தே இப்பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறதென்பதை யாவரும் மறுக்கக்கூடாத விஷயம். சென்னை ராஜதானியில் எத்தனையோ சிறந்த பண்ணையார்களும் மிராஸ்தாரர்களு மிருக்கிறார்கள். எவ்வளவோ வீண்செலவு செய்கிறார்கள். அதிலும் எலக்ஷன் வந்துவிட்டால் ஏராளமாகச் செலவு செய்கிறார்கள். இவர்கள் செய்யும் செலவுக்கெல்லாம் முக்கிய வருமானம் நிலவருமானம் தான். சகல தொழில்களும் தற்காலத்தில் நூதன முறையை அனுஷ்டித்து அபார லாபமடைவதுபோல் நம் நாட்டு பாரி மிராசுதாரர்களெல்லாம் பாழுந் தரிசாய்க் கிடக்கும் நிலங்களைப் பண்படுத்தி பழ வர்க்கச் செடிகளையும் மரங்களையும் வைத்துப் பயிர் செய்தால் பாக்கியசாலிகளாக வாழலாம். அமெரிக்க நாட்டார் கோட்டீஸ்வரர்களாக யிருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள் நடத்திவரும் சாஸ்திரீகமான விவசாயமும், சங்கங்களும், சாஸ்திரீயமாகப் பிரசுரிக்கப்படும் விவசாயப் பத்திரிகைகளுமே காரணம், நம் நாட்டிலோ எத்தனை விதமான சங்கங்களும் பத்திரிகைகளு மிருக்கின்றன. விவசாய சம்மந்தமான சங்கங்களும் பத்திரிகைகளும் வெகு சொற்பம். கிருஷிகன் ஒன்றே தலை நீட்டுகிறது. இச்சிறந்த பத்திரிகையில் எவ்வளவோ ருசிகரமான விவசாயங்களும், குறிப்புகளும், வினா, விடைகளும் நிறைந்திருக்கின்றன. தென்னையைப்பற்றி கனம் திமலையப்ப

முதலியார் அவர்கள் முதிர்ந்த அனுபவ ஞானத்துடன் எழுதிவரும் சிறந்த வியாசம் தென்னை பயிர் செய்வோர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகயிருக்கிறது. தென்னையைப் பற்றி இதுவரையும் எத்தனையோ புஸ்தகங்கள் இங்கிலீஷிலும் தமிழிலும் வாசித்திருக்கிறேன். அவைகளெல்லாம் இவ்வருமையான வியாசத்திற்கு ஈடாக மாட்டாது. கிருஷிகனுக்கு நான் கையொப்பக் காரனானது முதல் பழவர்க்க மரங்கள் வைத்துப் பயிர் செய்ய ரொம்பவும் ஆசையுண்டானது. பாழ்கரிசாகக் கிடந்த புஞ்சை நிலங்களைச் சீர்திருத்தி கிணறுகள் வெட்டி சுமார் 30-முப்பது எக்கர் நிலத்தில் மா, பலா, கொய்யா, ஆரஞ்சு, சபோடிலா, லெச்சி, திராச்சை முதலிய பலவிதமான பழவர்க்க மரங்களும் பல தினுசு தென்னைகளும் வைத்துப் பயிர் செய்திருக்கிறேன். என் விவசாயத்திற்கு "கிருஷிகன்" ஓர் வழிகாட்டியும் தோட்டக்காரனுமாகயிருக்கிறான். எதாவது சந்தேகம் எற்பட்டால் கிருஷிகன் முதல் வாலிய முதல் 9-வது வால்யம்வரை நேத்தியாய் பயிண்டு செய்து வைக்கப்பட்டிருக்கிற புஸ்தகங்களை எடுத்துப் படித்தால் தேடினது உடனே அகப்படுகிறது. இவ்வளவு அருமை வாய்ந்த பத்திரிகையை சிலர் அற்பமாக எண்ணுவது ஆச்சரியமா யிருக்கிறது. சமீபத்தில் ஓர் பெரிய மிராசுதாரரை சந்திக்கப் போயிருந்தேன். அவர்கள் வீட்டு ஜன்னலிலும் தட்டு முட்டு சாமான்களிலும் கிருஷிகன் தாறுமாறாகக் கிடப்பதைக் கண்டு மனவருத்தத்துடன், "என்ன ஐயா கிருஷிகன் எவ்வளவோ அருமையான பத்திரிகையாச்சுதே! இந்த நிலையில் வைத்திருக்கிறீர்களே என்று" கேட்டேன். இதை எல்லாம் கவனிக்கிறதில்லை இதுவும் சென்ற வருஷத்து பேப்பர். இவ்வருஷம் நிருத்தி விட்டேன். Hindu பேப்பரை மாத்திரம் ஒழுங்காக வாசித்து வருகிறேனென்று பதில் சொன்னார்கள். பெரிய மிராசுதார்கள் இந்த லக்ஷணத்திலிருந்தால் கிருஷிகன் எவ்வாறு பிரகாசிக்கக்கூடும்?

என்பதை இன்னம் அநேக மிராசுதார்கள் அறியாமலிருக்கிறார்கள். நம்மிடமிருந்து எவ்விதமான லாபத்தையும் கனர்தங்கிய பத்திராதிபர் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கறபிக்கும் நூதன முறைகளைப் பின்பற்றி அவைகளை நாம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவே இப்பத்திரிகை நடத்தப்பட்டு வருவதால் தேசாபி விருத்திக்காக நாமெல்லோரும் சேர்ந்துழைக்க வேண்டியது நமது கடமை.

சேர்ந்தமரம்
திருநெல்வேலி ஜில்லா

F. X. மூப்பனார்

இக்கடிதம் வால்யம் 11 இதழ் 2-விருந்து எடுக்கப்பட்டது.

(எப்ரல்மீ 1928-ளு)

இங்கும் ! அங்கும் !! எங்கும் !!!

# பாரதநாட்டுப் பயிர்த்தொழில் செய்திகள்

---

## சென்னை ராஜ்யத்தில்:—

சாலைகளிலுள்ள மரங்களை வெட்டி அழிப்பதை தடை செய்வதற்கான சட்டமொன்றை பிறப்பிக்க சென்னை சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இச் சட்டம் அமுலாக்கப்படுமென்று தெரிகிறது.

தென்னாட்டு களஞ்சியமென பெயர்பெற்ற தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆடுதுரை விவசாயப பண்ணையில் கடந்த மார்ச்சு 15உ ஜபபானிய நெல் சாகுபடி முறையைப்பற்றி விளக்கி கூறப்பட்டது. பல பாகங்களிலிருந்தும் விவசாயிகள் அச்சமயம் அங்கு ஏராளமாக கூடியிருந்து இம்முறைகளைத் தெரிந்து அவ்விதம் செய்து பார்ப்பதாகவும் உறுதி கூறியிருக்கிறார்கள்.

## உத்தர பிரதேசத்தில்:—

உ. பி. பிரதமர் ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் எப்ரல் 4உ ஜப்பானிய நெல் சாகுபடி முறை இயக்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து கூறியதாவது: இம்முறைகளைப்பற்றிய விவசாயிகள் நன்கு தெரிந்துகொண்டு இந் நல்ல முறைகளை கையாளும்போது, முதலில் நல்ல பலன் கிடைக்காமலும் போகலாம்; ஆனபோதிலும் விவசாயிகள் இதனால் அதைரியமோ மனத் தளர்ச்சியோ அடையக்கூடாது. எம்முனையில் எந்த முயற்சியிலும் துடக்கத்தில் இவ்வித தோல்வியும் நஷ்டமும் ஏற்படுவது சகஜமாகும்; விவசாயிகள் மனம் தளராது ஊக்கமுடன் முயற்சிசெய்து வெற்றிபெற முயலவேண்டும் எனக் கூறினார்.

## மேற்கு வங்காளத்தில்:—

மேற்கு வங்கத்தில் ஜப்பானிய முறையை ஆரம்பித்து வைக்கும்போது எப்ரம் 8உ விவசாய மந்திரி ஸ்ரீ அஹமத், "இபபுதிய திட்டத்தை விளக்கும் 1 லக்ஷம் துண்டு பிரசுரங்கள் வெளியிட்டு, பல பயிற்சி முகாம்களை ஏற்படுத்துவதுடன் கிராமாந்திரங்களில் 1200 விற்பனை ஸ்தலங்களின்மூலம் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள 66 ஆயிரம் டன் சல்பேட் உரத்தை வினியோகிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்" எனக் கூறினார்.

## ராஜஸ்தானில்:—

ஜப்பானிய நெல் சாகுபடி முறையை பரவச்செய்யும் நோக்குடன், நல்ல விதை, உரம், பயிற்சி ஸ்தலங்கள் இவைகளை விஸ்தரிக்க ஸ்தல அதிகாரிகள் விரிவான ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

## ஜம்மு காஷ்மீர்:—

இப்பிரதேச மக்கள் கையாண்டுவரும் முறைகள் சிக்கனமானதாகவும் லாபகரமானதாகவும் இருக்கிறதென்றும், ஜப்பானிய முறை அபபிரதேச விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்காதெனறும், அதனால் இப்போதுள்ளதைவிட அதிகம் செலவு செய்யவேண்டியிருக்குமென்றும், அபபிரதேச விவசாயிகளின் பொருளாதார நிலமை இம்முறைகளை கையாள்வதற்கேற்றதாக இல்லையென்றும் ரெவினியூ மந்திரி பார்சா அப்சல்பேக் தெரிவித்தார்.

---

# சாத்தியமா?

பம்பாய் ராஜ்யத்தில் தாணு ஜில்லாவில் சிஞ்சானி என்ற ஊரில் கோபால் தாஸ் என்ஷா என்பவர் ஜப்பானிய முறையில் நெல் சாகுபடி செய்தார் அவர் கூறுவதாவது:—

"நான் ஜப்பானி முறைப்படி நாற்றங்கால் தயார் செய்தேன். அதில் 400 ராத்தல் கலப்பு உரம் போட்டு குறைந்த விதையை தெளித்து நாற்றங்கால் தயார் செய்தேன். ஜூன் மத்தியில் நாற்று விட்டேன். ஆகஸ்டில் நடவு நட்டேன் நவம்பரில் அறுவடை செய்தேன்.

நாற்றுகள் 10" இடைவெளி விட்டு வரிசையாக நட்டேன். (நடவு ஒன்றுக்கு 2, 3 நாத்துகள் வீதம்). இந்த விதமான நடவு 5 விதங்களில் பரீக்ஷை செய்து பார்த்தேன்.

முதலாவது எவ்வித உரமும் இடாமல் ஆகஸ்டு மீ 4௳ நடவு நடப்பட்டது செப்டம்பர் மத்தியில் ஒரு தண்ணீர் பாய்ச்சி களையும் எடுக்கப் பட்டது. பயிர் 3·5' உயரம் வளர்ந்திருந்தது, கதிரின் நீளம் 9·5" ஆகும் நவம்பர் மீ 8௳ அறுவடை ஆயிற்று கண்டுமுதல் மகசூல் 16 மணங்கு.

இரண்டாவது முன்கூறிய முறையுடன் நடவின்போது 480 ராத்தல் கலப்பு உரமும் 160 ராத்தல் சூபர் பாஸ்போட்டும் போடப்பட்டது. பயிரின் உயரம் 4'—4·5'யும் கதிரின் நீளம் 10"மும் இருந்தது. 24 மணங்கு [16 மூட்டை) மகசூல் கண்டுமுதல் ஆயிற்று.

மூன்றுவது முறையில் நடவின்போது 240 கலப்பு உரம் போடப்பட்டது. 4 தடவை தண்ணீர் பாய்ச்சி ஒரு களையும் ஒரு இடையுழவும் கொடுக்கப்பட்டது. ஆகஸ்டு 27௳ 2-வது தடவையாக 240 ராத்தல் கலப்பு உரம் 160 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டு 60 ராத்தல் பொடாசியம் சல்பேட்டு போடப்பட்டது. பயிரின் உயரம் 5·5'—6'யும் கதிர் $11\frac{1}{4}$" நீளமும் இருந்தது. 40 மணங்கு ($26\frac{1}{2}$ மூட்டை) மகசூல் கிடைத்தது.

4-வது முறையில் 3 தடவை தண்ணீரும், ஒரு களையும்மட்டும் கொடுக்கப்பட்டது. நடவின்போது 360-க்கு கலப்பு உரமும் 27 தினங்களுக்கு பிறகு 160 ராத்தல் கலப்பு உரமும் 160-க்கு சூப்பர்பாஸ் பேட்டும் 60-க்கு பொடாஷியம் சல்பேட்டும் போடம்பட்டது. பயிர் 5—5. 6' உயரமும் கதிர் $11\frac{1}{4}$" நீளமும் இருந்தது 59 மணங்கு மகசூல் ஆயிற்று

கடைசியாக நடவின்போது 480 ராத்தல் கலப்பு உரமும், 160 ராத்தல் சூப்பர்பாஸ் பேட்டும் நடவின்போது உரமிடப்பட்டது நாலு சதுர நடவுக்கும் மத்தியில் ஒரு நடவும் நடப்பட்டது. 6 தடவை தண்ணீர் பாய்ச்சப் பட்டது. ஒரு களையும் எடுக்கப்பட்டது. முன்போலவே வளர்ச்சியிருந்தது. இதனால் 55 மணங்கு மகசூல் கிடைத்தது.

குறிப்பு: ஆகஸ்டு 10௳ பிறகு மழை பெய்யாததால் நீர்பாய்ச்சவேண்டிய அவசியம் ஏற்பட்டது அதிகப்படியாக ஒரு நடவு (அதாவது 6" இடைவெளியில்) நட்டதின் மூலம் மகசூலும் அதிகம் கிடைத்திருக்கிறது. சாதாரணமாக 1 பயிர்வீதம் நட்டால் 3 ராத்தல் விதையும் 2, 3, பயிர் வீதம் நட்டால் 9 ராத்தல் (¼ படி) விதையும் ஒரு ஏக்கருக்கு போதுமானதாகும். உரங்களை தக்கபடி உபயோகிப்பதின் மூலமும், நீர்பாச்சுதல் களையெடுத்தல் இவைகளின் மூலமும் மகசூலை பெருக்க முடியுமென்று தெரிந்து கொண்டேன். மீண்டும் இந்த பருவத்திலும் இம்முறைகளை பரிக்ஷை செய்துபார்க்க விரும்புகிறேன். என் அனுபவங்களை உங்களுக்கு தெரிவிப்பதின் மூலம் நீங்களும் இம்முறைகளை (நல்ல விதை, உரம், முறைகளை) கையாண்டு நாட்டின் உணவுப பஞ்சத்தை ஒழிக்க உற்பத்தியை பெருக்குவது சாத்தியமாகும் என நம்புகிறேன்.

# PRICE LIST OF VEGETABLE SEEDS
# காய்கறி விதைகளின் விலைப்பட்டியல்
## 1953—54

| | | Lb. பவுண்டு ரூ. | Lb. பவுண்டு அ. | oz. அவுன்ஸ் ரூ. | oz. அவுன்ஸ் அ. |
|---|---|---|---|---|---|
| **Radish** | **முள்ளங்கி** | | | | |
| Stout White No 1 — | வெள்ளை நீளம் நெ. 1 ... | 3 | 0 | 0 | 4 |
| Stout White No. 2 — | வெள்ளை நீளம் நெ. 2 ... | 2 | 4 | 0 | 3 |
| **Tomato** | **தக்காளி** | | | | |
| Ponderosa — | பாண்ட ரோஸா ... | 25 | 0 | 2 | 0 |
| Marglobe — | மார்குளோப் ... | 25 | 0 | 2 | 0 |
| Large Red — | சிவப்பு பெரியது ... | 10 | 0 | 0 | 12 |
| **Brinjal** | **கத்தரி** | | | | |
| Mukth kesi — | முக்தாகேசி ... | 6 | 0 | 0 | 8 |
| Long Purple — | ஊதா நீளம் ... | 6 | 0 | 0 | 8 |
| Round purple — | ஊதா உருண்டை ... | 6 | 0 | 0 | 8 |
| Long white — | வெள்ளை நீளம் ... | 8 | 0 | 0 | 9 |
| Egg shaped white — | வெள்ளை உருண்டை ... | 9 | 0 | 0 | 10 |
| Long Green — | பச்சை நீளம் ... | 8 | 0 | 0 | 9 |
| Round Green — | பச்சை உருண்டை ... | 8 | 0 | 0 | 9 |
| Giant of Benares — | காசி பூதம் ... | 10 | 0 | 0 | 12 |
| Thorn Variety — | முள் கத்தரி ... | 15 | 0 | 1 | 0 |
| **Lady's Finger** | **வெண்டை** | | | | |
| Smooth Long — | பச்சை நீளம் ... | 3 | 0 | 0 | 4 |
| Short white — | வெள்ளை குட்டை ... | 2 | 0 | 0 | 3 |
| **Cluster Beans** | **கொத்தவரை** | | | | |
| Long — | நீளம் ... | 3 | 0 | 0 | 4 |
| Short — | குட்டை ... | 2 | 0 | 0 | 3 |
| **Cucumber** | **வெள்ளரி** | | | | |
| Long Green — | பச்சை நீளம் ... | 3 | 8 | 0 | 5 |
| **Chilli** | **மிளகாய்** | | | | |
| Long Green — | பச்சை நீளம் ... | 2 | 8 | 0 | 4 |
| Short Pongal — | பொங்கல் மிளகாய் ... | 5 | 0 | 0 | 6 |
| **ONION** | **பெரிய வெங்காயம்** | | | | |
| Bellary — | பல்லாரி ... | 6 | 0 | 0 | 8 |
| **Bitter Gourd** | **பாகற்காய்** | | | | |
| Long Mixed — | நீளம் கலப்பு ... | 10 | 0 | 0 | 10 |
| White Long — | வெள்ளை நீளம் ... | 16 | 0 | 1 | 0 |
| Green Long — | பச்சை நீளம் ... | 15 | 0 | 1 | 0 |
| Small Fruited — | மிதி பாகற்காய் ... | 2 | 8 | 0 | 4 |
| **Snake Gourd** | **புடல்** | | | | |
| Long White — | வெள்ளை நீளம் ... | 14 | 0 | 1 | 0 |
| Short White — | வெள்ளை குட்டை ... | 12 | 0 | 0 | 14 |

| | | | | Lb. பவுண்டு | | oz. அவுன்ஸ் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | அ. | ரூ. | அ. |
| Ridge Gourd | | பீர்க்கங்காய் | | | | | |
| Long Ribbed | — | நீளம் | ... | 4 | 0 | 0 | 5 |
| Pumpkin | | பறங்கி | | | | | |
| Large Red | — | பெரியது சிவப்பு | ... | 4 | 0 | 0 | 5 |
| Ash Gourd | | சாம்பல் பூசணி | | | | | |
| Solid and Big | — | பெரியது | | 6 | 0 | 0 | 7 |
| Sword Beans | | வாளவரை (தம்மட்டங்காய்) | | | | | |
| White Seeded | — | செடி | ... | 2 | 8 | 0 | 3 |
| Red Seeded | — | கொடி | ... | 2 | 8 | 0 | 3 |
| Runner Beans (Avarai) | | அவரை | | | | | |
| Broad Long White | — | வெள்ளை நீளம் | ... | 3 | 0 | 0 | 4 |
| Green Long | — | பச்சை நீளம் | ... | 3 | 0 | 0 | 4 |
| White Puffed | — | வெள்ளை குட்டை | ... | 3 | 0 | 0 | 4 |
| Broad Long Red | — | சிவப்பு நீளம் | ... | 3 | 0 | 0 | 4 |
| Bottle Gourd | | சுரைக்காய் | | | | | |
| Long White | — | நீளம் | ... | 5 | 0 | 0 | 6 |
| Round White | — | உருண்டை | ... | 5 | 0 | 0 | 6 |
| Drumstick | — | முருங்கை | ... | 6 | 0 | 0 | 6 |
| Greens | | கீரை வகைகள் | | | | | |
| Long greon 6 months | — | ஆறுமாதத்தண்டு | ... | 2 | 0 | 0 | 3 |
| Mulaikeerai | — | முளைக்கீரை | ... | 1 | 8 | 0 | 3 |
| Araikeerai | — | அரைக்கீரை | ... | 3 | 8 | 0 | 5 |
| Sirukkerai | — | சிறுக்கீரை | ... | 4 | 8 | 0 | 6 |
| Paruppukeerai | — | பருப்புகீரை | ... | 3 | 0 | 0 | 4 |
| Agathikeerai | — | அகத்திக்கீரை | ... | 1 | 8 | 0 | 2 |
| Sour Green | | புளிச்சை | | | | | |
| Green | — | பச்சை | ... | 1 | 8 | 0 | 2 |
| Red | — | சிகப்பு | ... | 3 | 0 | 0 | 4 |
| Green Manure & Tree Seeds — தழை, மர விதைகள். | | | | | | | |
| Gliricidia | — | கிளைரிசிடியா | ... | 3 | 8 | 0 | 4 |
| Lucena Glaca | — | சவுண்டல் | ... | 0 | 8 | 0 | 1 |
| Sembai | — | சம்பை (சித்தகத்தி) | ... | 0 | 10 | 0 | 1 |
| Pongamia | — | புங்கன் | ... | 1 | 0 | — | |
| Rain Tree | — | மழை மரம் | ... | 1 | 8 | 0 | 2 |
| Portia cuiting | — | பூவரசன் துண்டுகள் 100க்கு | | 3 | 0 | | |
| Adothodai ,, | — | ஆடாதோடை ,, ,, | ... | 1 | 8 | | ,, |
| Fencing Trees—வேலிக்கான மரங்கள் | | | | | | | |
| Prosophis (Pods) | — | புரோசாபிஸ் (காய்கள்) | ... | 0 | 2 | | |
| Silk cotton | — | எலவன் | ... | 1 | 8 | 0 | 2 |
| Bamboo | — | மூங்கில் | ... | 15 | 0 | 1 | 8 |
| Erinthiria | — | முள்ளு முருங்கை | ... | 0 | 12 | | |
| Ingadulcis | — | கொடுக்காபுளியன் | ... | 0 | 12 | | |

N. B. மற்றும் இதில் காணப்படாத விதைகளின் தேவைக்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

# Price list of agricultural implements

## விவசாயக் கருவிகளின் விலைப் பட்டியல்

### From 15—7—53

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| Light Steel plough – இலேசான இரும்பு கலப்பை | ... | 12 | 8 | 0 |
| With W. Beam & handle – மா மேழி ஏர்க்காலுடன் | ... | 15 | 8 | 0 |
| U. P. No. 1, 6" plough – U. P. நெ. 1, 6" கலப்பை | ... | 62 | 8 | 0 |
| Rotoer attachment – ரூடர் இணைப்பு | ... | 20 | 0 | 0 |
| 12" Forrower attachment – 12" கிடங்கு வெட்டும் இணைபபு | ... | 21 | 12 | 0 |
| Jap Weeder – களையெடுக்கும் கருவி | ... | 22 | 8 | 0 |
| ,, Paddy Thresher No. 1 – கதிரடிக்கும் கருவி நெ. 1. | | 135 | 8 | 0 |
| ,, ,, ,, No. 2 – ,, ,, நெ 2. | | 255 | 0 | 0 |
| Winnowers – தூற்றும் கருவி | ... | | | |
| Seed drill – விதைக்கும் கொழு | ... | | | |
| Harvester – அறுவடைக்கருவி | ... | | | |
| Groundnut digger – வேர்கடலை பொருக்கும் கருவி | ... | | | |
| Puddler – சேடை கூட்டும் கருவி | ... | | | |
| Trampler – தழை மிதிக்கும் கருவி | ... | | | |
| Persian wheels – பக்கட் கவலைகள் | ... | | | |
| Narmada 1 – நர்மதா 1 | ... | 950 | 0 | 0 |
| ,, 2 – ,, 2 | ... | 975 | 0 | 0 |
| Tapti 1 – தப்தி 1 | ... | 615 | 0 | 0 |
| ,, 2 – ,, 2 | ... | 510 | 0 | 0 |
| ,, 2V – ,, 2V | ... | 650 | 0 | 0 |
| Kaveri 1 – காவேரி நெ. 1 | ... | | | |
| ,, 2 – ,, நெ. 2 | ... | | | |
| ,, 3 – ,, நெ. 3 | ... | | | |
| Bullock driven pump – கால்நடை பம்பு செட்டு | ... | 1250 | 0 | 0 |

N. B. மற்றும் கால்நடைகளைக்கொண்டும் கையினாலும் இயங்கும் பல விவசாயக் கருவிகளுக்கு எங்களிடம் விசாரிக்கவும்.

விலைகள் குறிப்பிடப்படாதவைகளுக்கு எழுதி தெரிந்துகொள்ள கோருகிறோம்.

Consult us for are all kinds of implements worked by Bullocks and hw men labour.

Please write to us for the items not quoted.

Packing Forwarding Charges Extra.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தவிரவும் ஒவ்வொரு ஆண்டிலும் ஒருபரிசு கொடுக்கும் நோக்கத்துடன் இவ்வாண்டு சந்தாதாரர்களுக்கு என "கிருஷிகன்" பௌண்டன் பேனு ஒன்றும் தயாராகி விட்டதால் கூடிய சீக்கிரம் அனுப்பிவைக்க உத்தேசித்துள்ளோம்.

புதிய ஆண்டிலிருந்து "சிறந்த விவசாயம்" என்னும் தலைப்புடன் விவசாயத்தைப்பற்றிய கட்டுரைகள் 24 பாகங்களாக பிரதி மாதமும் (விவசாய பாடங்களாக) வெளியிட உத்தேசித்துள்ளோம்.

தவிர சிறுகதைகள், துடர்கதைகள், சித்திரக்கதைகள் போன்ற பல அம்சங்களும் வெளியாகும். மொத்தத்தில் பிரதிமாதமும் தவறாமல் பல அறிய விஷயங்களைக்கொண்டு கிருஷிகன் பத்திரிகை வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கிருஷிகன் "நெல் சாகுபடி மலர்" பல அன்பர்களின் ஆதரவை பெற்றுள்ளது. அடுத்தமலர் "வனமகோத்சவ மலர்" இன்னும் சில தினங்களில் வெளிவர இருக்கிறது இவ்விரணடு மலர்களும் ஒவ்வொரு விவசாயிகளிடம் இருக்கவேண்டிய இரு ரத்தினங்களாகும். இவ்விதம் இன்னும்பல மலர்கள் வெளியிடவும் உத்தேசித்துள்ளோம்.

ஆகவே எங்கள் லக்ஷியம் சித்தி பெறவேண்டுமானல் உங்களின் ஆதரவு அவசியமாகும். ஆகவே குறைந்தபக்ஷம் கிராமத்துக்கொரு பத்திரிகையாவது சேர்ததுக் கொடுப்பதின் மூலம் எங்கள் சேவையை விரிவடையச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் நலனில் அக்கரையுள்ள நமது விவசாயிகள் பஞ்சாயத்து போர்டு, கூட்டுறவு சங்கம், கிராம ஆசிரியர்கள். கிராம உத்தியோஸ்தர்கள் மற்றுமுள்ளோர்கள் இவ்வேண்டுகோளை அன்புடன் ஏற்று எங்களுக்கு மென்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

இங்ஙனம் தங்கள்
ஆதரவை எதிர்பார்க்கும்
**பயிர்த் தொழில் பண்ணை**

---

## அட்டைப்பட விளக்கம்



தோட்டத்திலே பயிரூட்டந்திலே
ஆக்கத்திலே தொழிலூக்கத்திலே-உயர்நாடு
என்று பாடினர் நமது அமரகவி பாரதியார்.

இதற்கேற்ப இன்று நாட்டின் உணவு பஞ்சத்தை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயி ஒருவர் ஜப்பானிய முறையில் உற்பத்தி செய்த விளைச்சலுக்கு பின்புறம் நின்று ஆனந்த பூரிப்படையும் காக்ஷியை சித்தரிக்கிறது அட்டைப்படம்.

N. B. கிருஷிகன் ஜப்பானிய நெல் சாகுபடி மலர் விலை எட்டணு.

Reg. No. M. 5790 KIRUSHIKAN (NEW SERIES) APRIL 1953

# கிருஷிகன் கட்டுரைப் போட்டி

## விதிகள் :

1. கிருஷிகன் நேயர்களின் எழுதும் சக்திக்கி ஊக்கமளிக்கும் பொருட்டு இப்போட்டி திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டப்படி உயர்ந்ததாக கருதப்படும் கட்டுரைக்கு முதல் பரிசு ரூ. 50-ம்; 2-வது பரிசு ரூ. 25-ம், 3-வது பரிசு ரூ. 5 வீதம 5 பரிசுகளும் கொடுக்கப்படும்.
2. பரிசுத்தொகைகள் ரொக்கமாகவோ அல்லது விவசாயக் கருவிகளாகவோ செடி, விதைகளாகவோ கொடுக்கப்படும்.
3. இப்போட்டியில் எவரும் கலந்துகொள்ளலாம். ஆனால் கட்டுரைகளுடன் சந்தா நெம்பர் அல்லது கட்டுரைப்போட்டி கூபன் அடக்கம் செய்திருக்கவேண்டும்.
4. சந்தா நெம்பர் அல்லது கூப்பன் இல்லாமல் வரும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டுரைகளுடன் எழுத்தாளரின் பெயர் விலாசம் தெளிவாக எழுதியனுப்பப் (துண்டு கடிதத்தில்) படவேண்டும்.
5. இப்போட்டிக்கு கட்டுரைகள், கதைகள், நாடகங்களாக அனுப்பலாம். ஆனால் அவைகள் விவசாயம், விவசாயி, கிராம முன்னேற்றம் இவைகளை அடிப்படையாக கொண்டிருக்கவேண்டும்.
6. எழுத்தாளரின் சொந்த கற்பனையாகவே இருக்கவேண்டும். மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ வேறு பத்திரிகைகளில் பிரசுரமானதாகவோ இருக்கக்கூடாது.
7. ஒரே எழுத்தாளர் எத்தனை கட்டுரைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
8. கிருஷிகன் அளவுக்கு 4 பக்கங்களுக்கு குறையாமலும் 12 பக்கங்களுக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும்.
9. போட்டிக்காக அனுப்பப்படும் கதைகளில் பரிசுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டவை போக மற்றவைகளில் பிரசுரத்திற்கு ஏற்றவையாக கருதப்படுபவைகளுக்கு ஆசிரியர் உசிதப்படி சன்மானம் அளிக்கப்படும்.
10. பரிசும் பெறாமல்; பிரசுரத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்படாதவைகள் தபால் தலைகளுடன் வந்திருந்தால் மட்டுமே திருப்பி அனுப்பப்படும்.
11. கட்டுரைகள் முதலியன 31—8—53-க்குள் கிருஷிகன் காரியாலயத்திற்கு வந்து சேரவேண்டும். அந்த தேதிக்குப் பிறகு வருபவைகளும், சந்தா எண் அல்லது கூப்பன் இன்றி வருபவைகளும் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
12. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

Edited and published by A. S. Venkata Rao (Payirthozil Pannai)
Hanumanthapuram, Anniyur P. O., Villupuram S. I. R.
Printed at the Hanuman Printing Works, Villupuram.